பக்கங்கள் 20 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

அ.இ.ம.கா. கட்சியில் இருந்து

## முஷாரப் நீக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது!

உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்து அம்பாறை மாவட்ட

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 17 வியாழக்கிழமை 29.02.2024 அதிர்வு 213

# யாப்பு விதி மீறல்களை ஒப்புக்கொள்கின்றது தமிழரசின் நிர்வாகம்



## எல்லாவற்றையும் ஆரம்பத்தில் இருந்து ஒழுங்காக நடத்த மன்றில் உறுதிமொழி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பு விதிகள் அப்பட்டமாக மீறப்பட்டமையை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ள கட்சியின் நிர்வாகிகளான மாவை சேனாதிராஜா மற்றும் சிவஞானம் சிறீதரன், சண்முகம் குகதாசன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் முழுந்த கட்சி நிர்வாகிகள் தெரிவுகளை எல்லாம் புறமொதுக்கி வைத்துவிட்டு, அனைத்து விடயங்களையும் ஆரம்பத்தில் இருந்து யாப்பு விதிகளுக்கு அமைய முன்னெடுக்கத் தயார் என நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

04

# யாழ். வழக்கு மே 25 இற்கு ஒத்திவைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் யாப்பு விதிகளை மீறி மாநாட்டை நடத்துவதற்கு எதிகாகக் கட்சி உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியனால் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்காளி சார்பில் சட்டத்தரணி கு.குருபரனும், தமிழரசுக் கட்சி சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறிகாந்தாவும் முன்னிலையாகியிருந்தனர். யாழ். மாவட்ட நீவான் சதீஸ்கரன் வழக்கைஎதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.






# யாழில் தனியார் பஸ் உரிமையாளர்களின் போராட்டத்துக்கு இன்று மாலை தீர்வு உறுதி

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு இன்று மாலை 6 மணிக்குத் தீர்வு வழங்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உறுதி வழங்கியுள்ளார்.

போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்த ஆளுநர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ் உரிமையாளர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

04

(யாழ்.தனியார் பஸ் உரிமையாளர்களின் போராட்டங்கள் தொடர்பில் ஏற்கனவே வந்த செய்திகள் 2, 3 ஆம் பக்கங்களில்)




# சகல தனியார் பஸ் சேவைகளும் வடக்கில் முற்றாக இடைநிறுத்தம்

## வெறிச்சோடிக் காணப்படும் பஸ் நிலையங்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இன்று உள்ளூர் மற்றும் நெடுந்தூர தனியார் பஸ் சேவைகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் இருந்து வேறு மாவட்டங்களுக்குச் சேவையில் ஈடுபடும் பஸ்கள், அத்தோடு வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப் பாணத்துக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சேவைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ளூர் தனியார் பஸ்கள் சேவையை முன் னெடுத்த நிலையில் நொடுந்தூர பஸ் சேவைகள் முற்றாக நிறுத்தப்பட் டிருந்தன.

ஆனால், இன்று உள்ளூர் மற்றும் நெடுந்தூர பஸ் சேவைகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதை அவ தானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் முறையான பஸ் தரிப்பிடம் இல்லாததால் நேற்று முதல் தனியார் பஸ் சேவைகள் இடம்பெறாது என வட இலங்கை தனியார் பஸ் உரி மையாளர்கள் சங்கத்தின் தலைவர் சி.சிவபரன் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இதன் அடிப்படையில் இரண்டாவது நாளாகவும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப்படுள்ளமை குறிப் பிடத்தக்கது.











# இ.போ.ச. பஸ் நிலையத்தை முற்றுகையிட்டு தனியார் பஸ் உரிமையாளர்கள் போராட்டம்

## யாழ்ப்பாணத்தில் பயணிகள் பெரும் அசௌகரியம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் பணிப் புறக் கணிப்பில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ் உரிமையாளர்கள் இன்று இ.போ.ச. பஸ் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முறையான பஸ் தரிப்பிடம் இல்லா மையைக் கண்டித்து உள்ளூர் மற்றும் நீண்ட தூர தனியார் பஸ் சாரதிகள், நடத்துனர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வரு கின்றனர். இதனால் தனியார் போக்கு வரத்துச் சேவைகள் மாகாண மட்டத்தில் முடங்கியுள்ளது.

இந்நிலையில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள தனியார் பஸ் சாரதிகள், நடத்துனர்கள் யாழ். மத்திய பஸ் நிலையத்தை முற்றுகையிட்டு இன்று போராட்டம் நடத்தினர்.

இதையடுத்து இ.போ.ச. பஸ்களும் சேவையில் ஈடுபட முடியாதளவு நெருக் கடி ஏற்படுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித் தனர்.

பொலிஸார் தலையிட்டு சில இ. போ.ச. பஸ்களை முற்றுகையிலிருந்து விடுவித்த போதும் சுமுகமான சேவை இடம்பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனியார் பஸ் உரிமை யாளர்களின் கோரிக்கை தொடர்பாக பேசுவதற்குப் போராட்டத்தில் ஈடுபட் டுள்ள சிலரை ஆளுநர் மற்றும் அரச அதிபரை சந்திக்க அழைத்துச் சென் றார்.













# மன்னாரில் படையினர் அதிரடி வேட்டை! 53 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்பு!!

**(மன்னார் நிருபர் எஸ். றொசேரியன் லெம்பேட்)**

இலங்கைக் கடற்படை, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின்போது, மன்னார் – இலுப்பைக்கடவை தடாகத்தில் புதர்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 53 ஆயிரம் போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான பொருட்கள் நாட்டுக்குள் வருவதைத் தடுக்கும் நோக்கில் கரையோர மற்றும் கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வழமையான நடவடிக்கைகளின்போது இந்தப் போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

அதன்படி, வடமேற்கு கடற்படை கட்டளையில் உள்ள எஸ்.எல்.என்.எஸ். புவனேகாவால் இலுப்பைக்கடவை தடாகத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் உதவியுடன் நேற்று மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது கடற்படை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அருகே உள்ள புதர்களில் சந்தேகத்துக்கிடமான பெட்டியை மீட்டனர் .

இதன்போது 53 ஆயிரம் போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மீட்கப்பட்ட போதை மாத்திரைகள் சட்ட நடவடிக்கைகளுக்காக இலுப்பைக் கடவை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழில் தனியார் பஸ்...

இதனால் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டதோடு சிறிது நேரம் ஆஸ்பத்திரி வீதியின் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கை தொடர்பாகப் பேசுவதற்குப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிலரை ஆளுநரைச் சந்திப்பதற்காக அழைத்து சென்றார்.

பின்னர் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்த ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இன்று மாலை 6 மணிக்கு ஆளுநர் செயலகத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இலங்கை போக்குவரத்துச் சபையினர் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினருடன் கலந்துரையாடி உரிய தீர்வைப் பெற்றுத்தருவதாக உறுதி வழங்கினார்.

ஆளுநரின் வாக்குறுதியை அடுத்து முற்றுகைப் போராட்டத்தை கைவிட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தொடர்ந்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### முஷாரப்...

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் நீக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தாம் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை தவறு எனது தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்பால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, சிரான் குணரட்ன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் இன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

### யாப்பு விதி...

இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு இன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கைக் கட்சியின் உறுப்பினரான பரா சந்திரசேகர் என்பவர் தாக்கல் செய்திருந்தார். அதன் அடிப்படையில் கட்சியின் தேசிய மாநாட்டுக்கும் நடந்து முடிந்த பொதுக்குழு மற்றும் மத்திய குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கும் தடை விதித்து நீதிமன்றம் கட்டாணை பிறப்பித்திருந்தமை தெரிந்ததே.

இன்று இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிராளிகளான சிறீதரன் எம்.பி. மற்றும் குகதாசன் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவும், மாவை சேனாதிராஜா, யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி வி.புவிதரனும் முன்னிலையாகினர்.

சத்தியலிங்கம் மற்றும் குலநாயகம் ஆகிய எதிராளிகளின் சார்பில் சட்டத்தரணி பிரஷாலினி உதயகுமாரின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆன் குலநாயகம் முன்னிலையானார்.

கட்சியின் யாப்பு விதிகள் மீறப்பட்டுள்ளன என வழக்காளி குறிப்பிட்ட விடயங்களைத் தமது தரப்பினர் ஏற்றுக்கொள்கின்றனர் என்றும், ஆகையினால் கட்சி விடயங்களை ஆரம்பத்தில் இருந்து கட்சி யாப்புக்கு அமைய முன்னெடுக்கத் தாங்கள் தயார் என்றும் சிறீதரன், குகதாசன், மாவை சேனாதிராஜா, யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதேவேளை, வழக்காளிகளுக்கு அவர்கள் கோரிக்கைப் படி. நிவாரணம் வழங்க எதிராளிகள் இணங்குகின்றனர் எனவும், யாப்பு விதிகளுக்கு அமைய இனித் தீர்மானங்களும் நடவடிக்கைகளும் மீள எடுக்கப்படும் எனவும் அவர்கள் மன்றில் உறுதியளித்துள்ளனர்.

சத்தியலிங்கம் மற்றும் குலநாயகம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தமது தரப்பினர் பதில் வாதங்களை எழுத்து மூல சமர்ப்பணங்களாக முன்வைக்கத் தயார் என்ற போதிலும், மற்றைய எதிராளிகளோடு ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டை எடுப்பதற்காக அவர்களின் கருத்தியலோடு இணங்கிப் போகத் தயார் என்பதையும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதேவேளை, ஏழாவது எதிரியான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மன்றில் சமுகமளிக்காத காரணத்தால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



# இரட்டையரைத் துஷ்பிரயோகம் செய்த பிக்கு கைதாகிப் பிணையில் விடுவிப்பு

இரட்டை சகோதரர்களைத் தகாத முறைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் பிக்கு ஒருவர் ஹோமாகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாந்திரீகத்திலும் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர், 13 வயதான சகோதரர்களை மருத்துவ சிகிச்சை அளிக்கும் போர்வையில் தகாத முறைக்கு ஈடுபடுத்தினார் என்று கூறப்படுகிறது.

சடங்கு ஒன்றை நிறைவேற்றவேண்டும் என்பதற்காக குறித்த சிறுவர்களை, தன்னுடன் சில காலம் இருக்குமாறு அவர்களின் பெற்றோருக்கு அந்த பிக்கு அறிவுறுத்தியுள்ளார். இந்த நிலையிலே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சந்தேகநபர் 5 லட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்கிழக்கு பல்கலைக்கழக சர்வதேச ஆய்வரங்கு நாளை!

(கே. எ. ஹமீட் )

தென்கிழக்கு பல்கலைக்கழக சர்வதேச ஆய்வரங்கு நாளை முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் இன்று (29) 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு இடம்பெறவிருந்தது.

இந்த நிலையில் நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் முன்னெடுக்கும் தொடர்ச்சியான இரு நாள்கள் கொண்ட அடையாள வேலை நிறுத்தத்தின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று ஆய்வரங்கின் இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவித்துள்ளார்.

நீண்ட நாட்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்ட இந்த ஆய்வரங்கு திடீரென ஏற்பட்ட ஊழியர்களின் வேலைநிறுத்த போராட்டம் காரணமாக ஒத்திவைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இருந்தபோதும் திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் 2024.03.01ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்றும் ஏற்பட்டுள்ள தடங்கலுக்கு வருந்துவதா கவும் தெரிவித்தார்.

இடம்பெறவுள்ள "நிலையான எதிர்காலத்திற்கான டிஜிட்டல் மாற்றம்" எனும் தொனிப்பொருளிலான 12 ஆவது சர்வதேச ஆய்வரங்குக்கு பிரித்தானியாவின் குளோசெஸ்டர்ஷைர் பல்கலைக்கழகத்தின் கணினி மற்றும் பொறியியல் பீட பேராசிரியர் கமால் விச்கோம் அவர்கள் பிரதான பேச்சாளராக கலந்து கொள்ளவுள்ளார்.

# களுத்துறை சிறைச்சாலையில் ஹெரோயினுடன் பெண் கைது!

களுத்துறை சிறைச்சாலைக்குள் ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு சென்ற பெண் ஒருவர் களுத்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண் களுத்துறை சிறைச்சாலைக்கு 550 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு சென்றுள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்போது முலட்டியான, பயாகல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண் சிறையில் இருக்கும் தனது கணவரை பார்க்கச் செல்லும் போதே போதைப் பொருளை எடுத்துக் சென்றுள்ளார்.

தனது கணவருக்கு உணவு வழங்கும் போர்வையில் அவர் கொண்டு வந்த உணவுப் பொதியில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது அந்தப் பெண் தனது 06 வயது மகளுடன் சிறைச்சாலைக்கு வந்திருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தீர்ப்பால் எழுந்துள்ள நிலைமை

இணைய (நிகழ்நிலை) காப்புச் சட்டத்தை நிறைவேற்றியமை தொடர்பில் சர்ச்சையில் சிக்கியிருக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அது தொடர்பான முதல் தடைச்சிக்கலை வெற்றிகரமாகத் தாண்டி இருக்கிறார்.

மேற்படி சட்டமூலத்திற்கு அவர் சான்றளித்தமை சட்ட ரீதியாகத் தவறு என உத்தரவிடக் கோரி ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைப் பரிசீலனைக்கு ஏற்காமலேயே உயர் நீதிமன்றம் இன்று நிராகரித்து விட்டது.

இதன் மூலம் இந்த சர்ச்சையை - சபாநாயகரின் செயற்பாடு தொடர்பான பிணக்கை - உள் நுழைந்து விரிவாக ஆராயும் விடயத்தில் இருந்து உயர் நீதிமன்றம் தன்னை விலக்கிக் கொண்டு விட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் செயற்பாடு உயர் நீதிமன்றத்தில் பிய்த்து உதறப்பட்டு, ஆராயப்படும் இக்கட்டும் தவிர்க்கப்பட்டு விட்டது. இனி இவ்விடயத்தில், இதை ஒட்டி நாடாளுமன்றத்தில் தமக்கு எதிராக வரக்கூடிய நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்வதுதான் சபாநாயகருக்கு இருக்கும் சிக்கல்.

சட்டமூல நிறைவேற்றம் தொடர்பில் சபாநாயகரின் நடவடிக்கைகளை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை, விசாரணைக்கு ஏற்காமல் நிராகரிக்கும் இன்றைய உத்தரவை நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன, சிஹ்ரான் குணரட்ண, அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்றஆயமேவழங்கியிருக்கிறது.

இதில் நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தனவின் கடைசி பணி நாள் இன்று. நாளையுடன் அவர் சேவையில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

கடைசி நாளில் அவர் வழங்கிய சுமார் பதினைந்து உத்தரவுகள், தீர்ப்புகளில் இதுவும் ஒன்று. இந்த விடயத்தை ஆராய்ந்த உயர் நீதிமன்ற ஆயத்தின் சிரேஷ்ட நீதியரசர் அவர்தான்.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்ட போதே அது விசாரணைக்கு ஏற்கப்படுமா என்ற கேள்வி தாராளமாக முன்வைக்கப்பட்டிருந்தது. நாமும் இப்பத்தியில் அதனைச் சுட்டிக்காட்டி இருந்தோம்.

சபாநாயகர் ஒரு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முறைப்படி நிறைவேறியது எனச் சான்றளித்தால் அந்தச் சட்டமூலத்தின் செல்லுபடி தன்மையை எந்த நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என இலங்கையின் அரசமைப்புக் கூறுகின்றது.

இந்தியா, அமெரிக்க போன்ற நாடுகளில் கூட இத்தகைய சட்ட விதிமுறை இல்லை.

நமது நாட்டின் அரசமைப்பிலேயே அத்தகைய சட்ட விதிமுறை தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கும் போது, நிகழ்நிலைக்காப்புச் சட்டத்தில் சபாநாயகர் சான்றளித்த பின்னர், அதனைச் சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் உயர் நீதிமன்றத்திடம் முறையிட்டால் உயர் நீதிமன்றம் அந்த முறைப்பாட்டை விசாரணைக்கு ஏற்குமா என்ற கேள்வி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டபோதே பல தரப்பினராலும் எழுப்பப்பட்டிருந்தது.

ஆயினும் மேற்படி நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் சான்றளித்த போது, அந்தச் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் அளித்த பரிந்துரைகளை அவர் உதாசீனப்படுத்தி, புறமொதுக்கி இருக்கின்றார், அதற்கான நிவாரணத்தை - நீதியை - உயர்நீதிமன்றத்திடம் இருந்துதான் பெற வேண்டும், வேறு வழி இல்லை என்ற அடிப்படையில் இந்த மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி சட்டப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்த உயர் நீதிமன்றத்தின் தீர்மானம், எதிர்காலத்தில் நடக்கக்கூடிய சட்ட முறையற்ற பல விடயங்களுக்கு, சட்ட ரீதியான - சட்டத்துக்கு அமைவான - முறையில் நியாயம் பெறவே முடியாது என்ற கருத்தியலையும் ஆழப் பதித்திருப்பது கவனிக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் எந்தச் சட்டமூலத்தையும் அது தொடர்பான உயர் நீதிமன்றப் பரிந்துரைகள், வழிகாட்டல்கள், தீர்மானங்களை மீறி சபாநாயகரின் இசைவுடன் நிறைவேற்றலாம், அதற்கு சபாநாயகர் சான்றளித்தால் அதன் பின் அதனை கேள்விக்கு உட்படுத்தவே முடியாது என்ற மோசமான நிலைப்பாட்டையும் இந்தத் தீர்ப்பு உறுதிப்படுத்தி நிற்பது கண்கூடு.

# பாக்கு நீரிணையைக் கடக்கவுள்ள சிறுவன் சம்பந்தன் எம்.பியிடம் சென்று ஆசி பெற்றார்



திருகோணமலையை சேர்ந்த சிறுவன் ஒருவர் பாக்கு நீரிணையை கடக்கும் பயணத்தை முன்னிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனை நேரில் சந்தித்து ஆசிகள் பெற்றுள்ளார்.

இதன்போது இக்கட்டான சூழ் நிலைகளிலும் தனது பாக்கு நீரிணை பயணத்திற்காக அனுமதிகளுக்கு உதவி செய்தமைக்கு தனது மனமார்ந்த நன்றிகளை சிறுவன் தன்வந்த் அவருக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீச்சல் மூலம் பாக்கு நீரிணையை கடந்து உலகில் 06 ஆவது இடத்தைப் பெறவேண்டும் என்பதுதான் எனது எதிர்கால இலட்சியம் என திருகோணமலை இந்து கல்லூரியில் கல்வி கற்கும் 13 வயது மாணவன் ஹறிகரன் தன்வந்த் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போதைப்பொருள் பாவனையை தவிர்த்தல் மற்றும் கடல் வளங்களை பாதுகாக்க கோரி பாக்கு நீரிணை நீந்திக் கடக்க போவதாகவும் தன்வந்த் தெரிவித்துள்ளார்.

நாளை முதலாம் திகதி இந்திய தனுஷ்கோடியில் இருந்து அதிகாலை 12.05 மணிக்கு நீச்சலை ஆரம்பித்து, மதியம் தலை மன்னார் டியர் என்ற இடத்தில் நீச்சலை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இந்த மாணவன் நீந்திக் கடக்கும் தூரம் 31.5 கிலோ மீற்றர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடல் எல்லையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்!

## மார்ச் 3 இல் நடத்த ஏற்பாடு!!

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களை கண்டித்து இலங்கை கடல் எல்லையில் கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடல் பகுதிக்குள் அத்துமீறி கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இந்திய இழுவை மடி படகுகளை எதிர்த்து எதிர்வரும் 03ஆம் திகதி கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த 26 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்துக்கு அழைப்புக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தவறாது அனைத்து அங்கத்தவர்களையும் கறுப்புக் கொடி போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் அண்மைக் காலமாக இந்திய இழுவை மடி படகுகளின் அத்துமீறல் அதிகரித்துக் காணப்படுவதால் வடமராட்சி கிழக்கில் கறுப்புக் கொடி போராட்டத்துக்குப் பலத்த ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட இளைஞன் ஒருவர் உயிரிழப்பு!

களுத்துறை மாவட்டத்தின் வெலிப்பன்ன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹொரவல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் நேற்று (28) இரவு இடம் பெற்றுள்ளது.

ஹொரவல, வெலிபன்ன பகுதியைச் சேர்ந்த என்ற 32 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்பிரதேசத்தில் நடைபெற்ற பூப்புனித நீராட்டு விழா ஒன்றில் வைத்து இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. பூப்புனித நீராட்டு விழா வீட்டுக்கு வந்த இரண்டு தரப்பினருக்கு இடையில் நிலவிய பழைய பகை தகராறு காரணமாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அது முற்றிய நிலையில் இளைஞன் ஒருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று வெலிப்பன்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை ஏலம் போட்டு விற்பனை செய்ய நடவடிக்கை

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தகவல்

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை விற்பனை செய்வதற்கான ஏலங்கள் நேரடியாக நடத்தப்படவுள்ளன என்று துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை நேற்று (28) இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த போதே அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் மார்ச் மாதம் 05 ஆம் திகதி விற்பனை செய்வதற்கான ஏலங்கள் நேரடியாக நடத்தப்பட்டு முதலீட்டாளர் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் ஏலங்களை அழைத்துள்ளோம், மார்ச் 5 ஆம்திகதி காலை 10 மணி முதல் மதியம் 2 மணிவரை இதற்காக வரலாம்.

இது நேரலையில் செய்யப்படும். மதியம் 2 மணிக்குள் மதிப்பீடு செய்யப்படும். அதை ஆதரிக்க ஒரு தொழில்நுட்பக் குழுவும் உள்ளது. அவர்கள் ஏலங்களை மதிப்பீடு செய்வார்கள்.

இறுதியாக, அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். குறைந்தபட்சம் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கான வலுவான முதலீட்டாளர் வர வேண்டும்.

அத்துடன் விமான நிறுவனத்தின் 6,000 பணியாளர்களின் வேலைகளைப் பாதுகாப்பதும் அவசியம்.- என்றார்.

# திருட்டுச் சந்தேக நபர் ஒருவர் போதைப் பொருளுடன் கைது!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மருதானை லோகட் லேன் பிரதேசத்திலுள்ள வியாபாரி ஒருவரின் வீட்டில் 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை திருடிய சந்தேக நபர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பதில் பொறுப்பதிகாரி ஆர்.சதுரங்கவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் லோகட் லேன் பாலத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 47 வயதுடைய சந்தேகநபர் 6377மில்லி கிராம் ஹெரோயினுடனும், இரும்பு அலவாங்குடனும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருடப்பட்ட நகைகள் வாழைத்தோட்டத்திலுள்ள அடகு வைக்கும் நிலையத்தில் அடகு வைக்கப்பட்டுள்ளன என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சிறுவர், பெண்கள் தடுப்பு பணியகம் யாழ். பண்ணையில் திறந்து வைப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் தடுப்பு பணியகம் நேற்று (28) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான சனத்தொகை நிதியத்தின் (UNFPA) ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் போய் ஸ்மித் (Poi Smith) குறிந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.யாழ்ப்பாணம் பண்ணை சுற்று வட்டத்துக்கு அருகில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

இந்த நிகழ்வில், ஐக்கிய நாடுகளுக்கான சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி குனே அடேனி (Kune Adeni), யாழ். மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபால சுந்தரன், பொலிஸ்அதிகாரிகள்கலந்து கொண்டனர்.







# கொழும்பு - கண்டி வீதியில் அரிசி லொறி கவிழ்ந்து விபத்து

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு – கண்டி நெடுஞ்சாலையில் தங்கோவிட்ட, ஹெலகலவுக்கு அருகில் திங்கட்கிழமை அரிசி ஏற்றிக் கொண்டு வந்த கனரக லொறி வீதியின் மத்தியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் லொறி உதவியாளர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த விபத்தால் கொழும்பு – கண்டி நெடுஞ்சாலையில் மூன்று மணித்தியாலயங்களுக்கு மேலாக போக்குவரத்து முற்றாக தடைப்பட்டிருந்தது.

வீதி போக்குவரத்து பொலிஸார் விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இளையோர் கல்வியோடு சமூகத்திலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்

## கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர் )

இளைஞர்கள் கல்வி கற்பதற்கு முக்கியத்துவம் அளிப்பதோடு நேரம் கிடைக்கும் வேளைகளில் சமூகப் பணிகளிலும் சமூக சிந்தனைகளை வளர்த்துக்கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவருமான எஸ்.எம். சபீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

மாளிகைக்காடு மற்றும் சாய்ந்தமருது இளைஞர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியனார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு,

கல்வி எவ்வளவு முக்கியமோ



அதேபோன்று சமூக சிந்தனையும் முக்கியமாகும். காரணம் ஒரு சிலர் இனவாதத்தையும், மற்றவர்களை குறைகூறி மக்களை முட்டாளாக்கி அதிகாரத்துக்கு வருகின்றார்கள். அவ்வாறு வந்தவர்களால் எமது சமூகம் எந்தவேளையிலும் முன்னேறவில்லை.

அதனால் நாம், ஒட்டுமொத்த சமூகமும் அறிவார்ந்த சமூகமாக முன்னேற தேவையான திட்டங்களை வகுக்க வேண்டும். எமது இளைஞர்கள் புதிய தொழில் முயற்சியாளர்களாக வளரக் கூடிய வழிவகைகளையும், எமது மக்களின் ஏற்றத் தாழ்வைச் சீர்செய்யக் கூடிய பொருளாதார திட்டங் களையும் முன்னெடுக்க வேண்டும்.

எமது மக்களின் வாழ்வியல் உறுதிப்பாட்டுக்கான வழிவகைகளை எவ்வாறு முன்கொண்டு வரலாம் என்ற சிந்தனையோடு கல்வி பயிலுங்கள் நிச்சயம் எமது சமூகமும், நாடும் முன்னேறும்.– என்றார்.



# கல்முனை சுகாதாரப் பணிமனைக்கு மருந்துப் பொருள்கள் கையளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக வாய்ச் சுகாதார தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வாய் சுகாதார பிரிவுக்கு யுனிலிவர் ஸ்ரீ லங்கா நிறுவனத்தால் ஒரு தொகை மருந்துப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஸ்ரீ லங்கா யுனிலிவர் நிறுவன அதிகாரிகள், பணிமனை வைத்திய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.






# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கல்விக்கு உதவித் தொகை வழங்கல்

(எம்.எம்.றம்ஸீன்)

அங்கவீனமுற்றோர் தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சாய்ந்த மருது பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் மாற்று திறனாளிகளின் பிள்ளைகளுக்கான கல்வி உதவிக் கொடுப்பனவு பிரதேச செயலாளர் எம். எம்.ஆசிக் தலைமையில் வழங்கப் பட்டது.

இதில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை பிரிவு) எம்.எம். சித்தி நளீபா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# காசநோய் சம்பந்தமாக அறிவூட்டும் செயலமர்வு

(அஸ்ஹர் ஆதம்)

காசநோய் சம்பந்தமாக அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் செயலமர்வு சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறையிலுள்ள கல்முனைப் பிராந்திய மார்பு நோய் சிகிச்சைப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.



இதில் மாவட்ட காசநோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல். அப்துல் கபூர் வளவாளராகக்கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிர்வாக உத்தியோகத்தர் எம். என்.எம். றம்ஸான், திட்டமிடல் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம். அஸ்ஹர், அபிவிருத்தி உதவியாளர் ஏ.பஷீர் உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



# அம்பாறையில் உணவு தேடி படையெடுக்கும் யானைகள்

(பாறுக் ஷிஹான்)

வேளாண்மை அறுவடையின் பின்னர் புற்களைத் தேடி யானைக் கூட்டம் படையெடுத்து வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் திடிரென சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி வில்லுக்குளப் பகுதிகளை ஊடறுத்து யானைகள் இவ்வாறு வருகை தந்துள்ளன.

இதன் போது யானைகள் அங்குள்ள புற்களை உண்டன. கூட்டத்தில் உள்ள யானை குட்டிகள் விளையாடுவதையும் காண முடிந்தது.

பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என 100 இற்கும் அதிகமான யானைகள் அந்தப் பகுதியில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கி வருகை தந்திருந்தன.

தினமும் அந்தப் பகுதிக்கு வரும் யானை கூட்டத்தை மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். இவ்வாறு வயல்வெளிகளை நோக்கி வருகை தந்துள்ள யானைகள் ஊருக்குள் பிரவேசிக்க முடியாத வகையில் பார்வையாளர்களாக உள்ள மக்கள் சத்தங்களை எழுப்பிய வண்ணம் உள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுவதனாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளை யானைகள் உண்பதற்கு வருகை தருகின்றன என்றும் அருகில் உள்ள பொது மக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.





# இளைஞர், யுவதிகளுக்குத் தொழிற்பயிற்சி நாட்டில் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது!

## வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவிப்பு

இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி இன்றியமையாத தேவை என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையின் மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தில் பயிற்சி பெற்ற தாதியர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கான சான்றிதழ், சீருடை வழங்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

ஆறு மாத என்.வி.கியூ. சான்றிதழ் மற்றும் மூன்று வருடங்களுக்கான தாதியர் பயிற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கான சான்றிதழ்கள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன.

இதனையடுத்து விசேட உரையும் நிகழ்த்தப்பட்டது. அதன்போது மேற்ண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,




இளைஞர், யுவதிகளுக்குத் தற்போது தொழிற்பயிற்சியை பெற்றுக் கொடுக்க வேண்டும். கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் பரீட்சைகளைநிறைவுசெய்த மாணவர்களுக்கும் தொழிற்கல்வி தொடர்பான அறிவூட்டல் மிக முக்கியம்.

பெரும்பாலானோருக்குப் பல்கலைக்கழக கல்வி கிடைக்காமல் போகும் பட்சத்தில் அவர்களுக்குத் தேவையான தொழில் துறைசார் அறிவு தேவைப்படுகிறது. அந்த வகையில் தொழில்நுட்ப பயிற்சிகளுடன் மொழிசார் பயிற்சிகளும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

சிறந்த, தகுதியான, ஆளுமைமிக்கவர்களை உருவாக்குதல் வேண்டும். ஆசியாவின் முதல் மருத்துவ கல்லூரியாக ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையின் மருத்துவ விஞ்ஞான நிறுவகத்தினூடாக இவ்வாறான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பது மகிழ்ச்சி தருகிறது.-என்றார்.




# வெருகலில் 234 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கல்

(எம்.எம்.நௌபீக்)

திருகோணமலை வெருகல் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சுமார் 234 குடும்பங்களுக்குக் காணி உறுதிப்பத்திரம் மற்றும் காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (27) செவ்வாய்கிழமை வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண ஆளுநர் ஆ.செந்தில் தொண்டமானும், உதவி பிரதேச செயலாளர் எம்.ரி.எம். இஸ்ஸத் மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள், பயனாளிகளும் கலந்து கொண்டனர்





# கல்முனை மாநகர சபைக்கான கொடுப்பனவுகள் ஒன்லைனில்

**(பாறுக் ஷிஹான், அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை மாநகர சபைக்கான கொடுப்பனவுகளை ஒன்லைன் மூலம் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (27) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இந்தத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற நிதி மோசடிகளைக் கருத்தில் கொண்டு, நிதிப் பிரிவை ஒழுங்கு முறைப்படுத்தி, மோசடிகளை முற்றாகத் தவிர்க்கும் வகையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண சபை என்பவற்றின் அங்கீகாரம் பெற்ற வயம்ப அபிவிருத்தி அதிகார சபையின் “CAT-20 Payment System” எனும் செயலியானது யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் சில மாதங்களுக்கு முன்னர் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

ஒரே கூரையின் கீழ் சேவைகளை வழங்கும் Onestop Service முகப்பு அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்ட மேற்படி முறைமையின் ஓர் அங்கமாகவே ஒன்லைன் மூலமாக கொடுப்பனவுகளை செலுத்தும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. ஏ.எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், யு.என்.டி.பி. நிறுவனத்தின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர் ஷாமில் சாலிஹ் உட்பட வயம்ப அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் மாநகர சபையின் பிரிவுத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

இது சம்மந்தமான மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் முகப்பு அலுவலகத்தின் 0672059546 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகிறது.



# விமானப்படையின் 73 ஆவது ஆண்டில் கண்டல் தாவரங்கள் நடும் பணி ஆரம்பம்

**(வவுணதீவு)**

இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு வாவியோரங்களில் கண்டல் தாவரங்கள் நடும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (28) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு விமானப்படையின் கட்டளை தளபதி குறுப் கப்டன் சரத் பண்டார தலைமையில் சேற்றுக்குடா, சுமைதாங்கி பகுதி வாவிக்கரை ஓரங்களில், சிறந்த சூழலை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தக் கண்டல் தாவரங்கள் நடும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது முதற்கட்டமாக 500 கண்டல் தாவரங்கள் மட்டக்களப்பு விமானப்படை உத்தியோகத்தர்களால் நடப்பட்டது.







# பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2024 ஆண்டுக்கான அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு நேற்று (28) காலை கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இதன் போது அங்கு வருகை தந்த அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறிக்கு இன நல்லிணக்கம், பொதுமக்கள் தொடர்பாடல், போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டமைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச் செயலாளர் எம்.ஐ .எம் ஜிப்ரி (எல்.எல்.பி) உள்ளிட்ட பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக் கப்பட்டார்.

இதன் போது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக, கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ. வாஹீட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# அட்டாளைச்சேனை நிலாமியா பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கௌரவிப்பு

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை நிலாமியா ஜுனியர் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு கௌரவம் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

2017 தொடக்கம் 2023 ஆம் ஆண்டுவரை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 29 மாணவர்கள் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

மாகாண மட்டத்தில் வெற்றியீட்டிய மூன்று மாணவர்களும் இந்த மாணவர்கள் சித்தியடைவதற்கு வழிப்படுத்திய ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் ஞாபகர்த்தமாக 'நிலாமியாவின் நித்திலங்கள்' எனும் மலர் வெளியிடப்பட்டது.

பாடசாலை அதிபர் ஜனாப்.எம்.எப்.எம்.நழீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க்




ஏ.எல்.எம்.காகசிம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். அஹமட் கியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மற்றும் அதிதிகளாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் சட்டத்தரணி ஐ.முனாஸ், அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் ஏ.சி.இமாதுத்தீன் மற்றும் நிலாமியா பௌண்டேஷன் தலைவர் ஏ.ஜி.முபாறக் ஆகியோருடன் பிரமுகர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.



# கிராம சக்தி வேலை திட்டத்தில் 15 லட்சம் ரூபா நிதி கடன் உதவி

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முகம்மது ஹனிபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக கிராம சக்தி தேசிய வேலை திட்டத்தின் கீழ் சம்மாந்துறை புளோக் ஜே வெஸ்ட்-2 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளுக்கு சுழற்சி முறையிலான நுண்கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று (28) பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ. ஜெஸிலா தலைமையில் புலோக் ஜே.வெஸ்ட்-02 பல்தேவைக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கிராமத்தில் வாழ்வாதார தொழில் மேம்பாட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளுக்கும் 15 லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டது.

நுண்கடன் வழங்கும் நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகச் சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம். அஸ்லம் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கடனுதவித் தொகைகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் விடயத்துக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.எம் பௌஸான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம் நியாஸ், கிராம சக்தி சங்க நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.




# முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இலக்கியத்துறையில் முத்திரை பதித்த, மற்றும் இலைமறை காய்களாக இருக்கும், இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் "உலகம் முழுவதும் எங்கள் கதைகள்" சிறு கதைகளின் முதலாவது தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு கல்முனை ஆஸாத் பிளாசா வரவேற்பு மண்டபத்தில் 'பென் கிளப்' தலைவி எழுத்தாளர் சித்தி மசூறா சுஹூர்த்தீன் தலைமையில் நடைபெற்றது.

ஆற்றலும், ஆளுமையும்மிக்க இலங்கை பென் கிளப் உறுப்பினர்களால், தொகுத்து வெளியிடப்பட்ட சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.மன்சூரின் புதல்வியும் ஏ.ஆர். மன்சூர் பவுண்டேஷனின் தலைவியும் ஆஸ்திரேலியா நாட்டின் முஸ்லிம் பெண்கள் கவுன்சில் தலைவியுமான சட்டத்தரணி திருமதி மரியம் நளிமுத்தீன் கலந்து கொண்டார். மரியம் நளீமுத்தியின் கணவர் டாக்டர் நளிமுத்தீன் சிஹாப்தீன், பிரதி கல்வி பணிப்பாளர் ஜிஹானா ஆலிப், இணைப்பாளர் மிப்ராஸ் மன்சூர் உட்பட பெண் எழுத்தாளர்கள், இலக்கிய படைப் பாளிகள், பெண் கிளப் நிர்வாக அங்கத் தவர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது பிரதம அதிதி பெண் ஆளுமை மரியம் நளிமுத்தீன் இலங்கை பெண் கிளப் அங்கத்தவர்களால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.





# மத்திய பிரதேசத்தில் விபத்து; 14 பேர் பலி; பலர் படுகாயம்

மத்திய பிரதேச மாநிலம் திண்டோரியில் நேற்று இரவு லொறி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்தவர்களில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இந்த விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தேவேரி கிராமத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின்பு லொறியில் ஏறி தங்கள் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். அந்த வாகனம், திண்டோரி மாவட்டம் பட்ஜார் கிராமத்துக்கு அருகே வரும் போது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்களை பொதுமக்கள் மற்றும் பொலிஸார் மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள சமூக நல மையத்துக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்து கேள்விப்பட்டது மாவட்ட ஆட்சியர் மற்றும் பொலிஸ் கண்காணிப்பாளர் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக விபத்து நடந்த இடத்துக்கு விரைந்தனர்.

இதனிடையே விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள மாநில முதல்வர் மோகன் யாதவ், உயிரிழுந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் ரூபா நிவராணம் அறிவித்துள்ளார். நிலவரத்தை மதிப்பீடு செய்வதற்காக மாநில அமைச்சர் சம்பதியா உய்கி தண்டோரிக்குச் செல்வார் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அலுவலகம் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியில்,

“திண்டோரி மாவட்டத்தில் இடம்பெற்ற விபத்தில் பல விலைமதிப்பில்லாத உயிர்கள் பறிபோயிருப்பதற்கு முதல்வர் மோகன் யாதவ் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார். விபத்தில் உயிரிழுந்தவர்களின் ஆன்மா சாந்தியடைவதற்கும், அவர்களின் குடும்பத்தினருக்கு இந்த இழப்பினைத் தாங்கும் பலத்தினை தருவதற்காகவும் அவர் இறைவனை வேண்டிக்கொள்கிறார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் ரூபா நிவாரணம் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். மேலும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும் படி மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதல்வரின் அறிவுறுத்தலின் படி, அமைச்சர் சம்பதியா உய்கி நிலைமையை மதிப்பீடு செய்ய தண்டோரிக்கு விரைகிறார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவை நம்பியே பா.ஜ.க. இருக்கிறது

## திருமாவளவன் கருத்து



எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவை நம்பித்தான் பா.ஜ.க. இருக்கிறது. இதற்கு அ.தி.மு.க. தொண்டர்கள் இடம் கொடுக்க கூடாது என அ.தி.மு.க. தொண்டர்களுக்கு திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பிரதமர் மோடி இரண்டு நாள் சுற்றுப் பயணமாக தமிழகம் வந்து சென்றிருக்கிறார். குறிப்பாக பல்லடத்தில் அவர் பேசுகையில் 10 ஆண்டுகளில் அவர் மக்களுக்கு செய்தது என்ன என்பது பற்றி பெரிதாக குறிப்பிடவில்லை. 10 ஆண்டுகளில் இந்த நாடு என்ன முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை, என்ன வளர்ச்சி கண்டிருக்கிறது என்பது குறித்து அவர் குறிப்பிடவில்லை. காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சிகளை விமர்சிப்பது. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்றவர்களை புகழ்ந்து பேசுவது என தனது உரையை அமைத்துக்கொண்டார்.

தமிழ்நாட்டில் கொள்கைகளைப் பேசி தன்னுடைய கட்சிகளை வளர்க்க வேண்டும் என்று பாரதிய ஜனதா, பிரதமர் மோடி, அமித்ஷா போன்றவர்கள் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. தமிழ்நாட்டில் ஆட்சியில் இருக்கக் கூடிய தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளை விமர்சிப்பது. அத்துடன் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்றவர்களையும் புகழ்ந்து பேசுவது போன்ற உத்தியை கையில் எடுத்திருக்கிறார் பிரதமர் மோடி. அவர் தன்னை நம்பவில்லை. தன் செல்வாக்கை நம்பவில்லை. தன் மீது மக்கள் கொண்டிருக்கின்ற நன் மதிப்பை நம்பவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை நம்பித்தான் அரசியல் பண்ண முடியும் என்ற நிலைக்கு மோடிவந்து விட்டார் என்பதைத்தான் அவரது பல்லடம் உரை நமக்கு உணர்த்துகிறது.

எம்.ஜி.ஆரையும் ஜெயலலிதாவையும் புகழ்ந்தால் அ.தி.மு.கவின் ஓட்டைப் பெற முடியும் என நினைக்கிறார்கள். இதன் மூலம் அ.தி.மு.கவை பலவீனப் படுத்த வேண்டும். அதன் வாக்கு சதவிகிதத்தை சரியச் செய்ய வேண்டும் என பா.ஜ.க. கணக்கு போடுகிறது என உணர முடிகிறது. அ.தி.மு.க. தொண்டர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சிகளையும் எதிர்க்கிறோம் என்ற பெயரில் பா.ஜ.கவுக்கு வாக்களிக்கக் கூடிய நிலை வந்தால் தமிழ்நாட்டுக்கு பெரிய தீங்கு விளையும். இதை தமிழ் நாட்டு மக்கள் குறிப்பாக அ.தி.மு.க. தொண்டர்கள் உணர வேண்டும். அ.தி.மு.க. தொண்டர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி சுட்டிக் காட்டுகிறது.

அதேபோல், தூத்துக்குடியில் பேசிய பிரதமர் தான் பிரதமர் என்பதை மறந்து விட்டு அரசு விழா என்பதையும் மறந்து விட்டு தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் மேடையில் இருக்கிறார் என்பதையும் மறந்து தி.மு.கவை கடுமையாக விமர்சிக்க கூடிய உரையாக ஓர் அரசியல் பிரச்சார மேடையாக அதை அவர் பயன்படுத்திக் கொண்டார். மக்களவையில் அவர் கடைசியாக ஆற்றிய உரையும் அப்படித்தான் இருந்தது அவருடைய பொறுப்புக்கு இவை அழகல்ல என்பதை விடுதலை சிறுத்தைகள் கட்சி தெரிவித்துக் கொள்கிறது.

எத்தனை முறை பிரதமர் தமிழ் நாட்டுக்கு வந்தாலும். சுற்றி சுழன்று பரப்புரைகளை மேற்கொண்டாலும். தமிழ்நாட்டு மக்கள் மோடி வித்தையை நம்ப மாட்டார்கள். பா.ஜ.கவுக்கு அவர் வருகைகளால் பெரிய செல்வாக்கு உருவாகாது என்பதை விடுதலை சிறுத்தைகள் கட்சி அடித்துச் சொல்கிறது. எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தி.மு.க. கூட்டணி 40க்கு 40 வெற்றி பெறும்.” – என்றார்.




# மக்களவை தேர்தலுக்குப் பின்னர் தமிழகத்தில் தி.மு.க. அகற்றப்படும்

## திருநெல்வேலி பா.ஜ.க. கூட்டத்தில் பிரதமர் மோடி கருத்து

மக்களவைத் தேர்தலுக்கு பின்னர் தமிழகத்திலிருந்து தி.மு.க. முற்றிலும் அகற்றப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி பாளையங்கோட்டையில் நேற்று நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நெல்லை மக்கள் திருநெல்வேலி அல்வாவைப் போல இனிப்பான மற்றும் இளகிய மனம்கொண்டவர்கள். தமிழக மக்கள் பா.ஜ.க. மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர். பா.ஜ.கவின் உண்மையான சமூக நீதி, நேர்மையான அரசியலை மக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் நம்பிக்கையை முழுவதுமாக பா.ஜ.க. நிறைவேற்றும். இது மோடியின் உத்தரவாதம்.

பொருளாதாரத்தில் இந்தியா வேகமாக வளர்கிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் வெளிநாடுகளுடன் போட்டியிடுகிறது. தமிழ்நாடும் அதில் பெரிய வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

பிற நாடுகளுக்குச் செல்லும் இந்தியர்களை, வெளிநாட்டினர் பெருமையாகப் பார்க்கிறார்கள். மத்திய அரசு சிறப்பாக செயல்படுவதற்கு இதுவே சாட்சி. தமிழக மக்கள் பா.ஜ.கவின் பின்னால் வரத் தொடங்கியுள்ளனர். டில்லிக்கும், தமிழ்நாட்டுக்கும் இடையே உள்ள தூரம் மிகவும் குறைந்துள்ளது. மத்திய அரசு திட்டங்களின் பலன்கள் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரவியுள்ளன.

தமிழக நலனுக்காக நாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்காத அரசாங்கம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசு என்ன செய்தாலும், குறை சொல்கிறார்கள். அதை மீறி மக்களுக்கு நாங்கள் நன்மை செய்து கொண்டிருக்கிறோம். இவர்கள் ஏன் நாட்டின் வளர்ச்சியை தடுக்கிறார்கள்? திட்டங்களை ஏன் தடுக்கிறார்கள்?

மக்களின் நலனைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் மாநில அரசுக்கு இருக்கிறது? இவர்கள் நாட்டைக் கொள்ளை அடிப்பதற்காகவே வளர்ச்சியை தடுக்கின்றனர். அதையெல்லாம் மீறி மக்களுக்கு திட்டங்களைக் கொண்டுவந்துள்ளோம்.

இலங்கையில் 5 மீனவர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டபோது, அதைதடுத்து நிறுத்தினோம். இந்தியர்கள் மீது எவரும் கை வைக்க முடியாது.

அரசியலை திருத்த வேண்டிய காலம் வந்துள்ளது. தி.மு.க. பொய்வேஷம் போடுகிறது. பிரித்தாளும் சூழ்ச்சி செய்கிறது. ஆனால், இனி தி.மு.கவைப் பார்க்க முடியாது. தமிழகத்தில் இனியும் தி.மு.க. இருக்க முடியாது. ஏனெனில், இங்கு அண்ணாமலை வந்துவிட்டார். இனி நீங்கள் எங்கு தேடினாலும் தி.மு.க. இருக்காது. தாங்கள் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக, உங்கள் நம்பிக்கையை, உங்கள் மொழியை, உங்கள் இனத்தை சிறுமைப்படுத்தி, கேவலப்படுத்தும் தி.மு.க, மக்களவைத் தேர்தலுக்குப்பின் முற்றிலுமாக இங்கிருந்து அகற்றப்படும்.” – என்றார்.

# பா.ஜ.கவுடன் ஓ.பி.எஸ். தொடர் பேச்சுவார்த்தை



பிரதமர் மோடியின் தமிழக வருகையின்போது ஓ.பன்னீர்செல்வத்துக்கு அழைப்பு விடுக்கவில்லை. அவர் பா.ஜ.க. கூட்டணியில் சேர்க்கவில்லை என்று செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில், சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள இல்லத்தில் ஓ.பன்னீர்செல்வம், பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று செய்தியாளர்களை சந்தித்தனர். இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

”எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் நிலையான ஆட்சி தரக்கூடிய வாய்ப்பு பிரதமர் மோடிக்கும், அவர் சார்ந்த தேசிய ஜனநாயக கூட்டணிக்கும்தான் இருக்கிறது. எனவே நாட்டின் நலன் கருதி, நிலையான ஆட்சி தொடர வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு.

தேசிய ஜனநாயக கூட்டணியில் பன்னீர்செல்வம் இல்லை என இதுவரை பா.ஜ.க. அறிவிக்கவில்லை. பா.ஜ.க. மாநிலத் தலைவர் மற்றும் மேலிட தலை வர்களுடன் தொடர்ந்து பேசிக் கொண்டு தான் இருக்கிறோம். இன்றைக்கும் பேசியிருக்கிறோம். தமிழகம் வந்த மோடி, எங்களை அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் ஒரே குடும்பத்துக்குள் இருக்கிறோம்.

பா.ஜ.க. தேசிய கட்சி. தமிழகத்தில் பா.ஜ.க. தலைமையில் தான் கூட்டணி. எங்கள் அணி தமிழகம், புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் போட்டியிடும். தேர்தலே அறிவிக்காத நிலையில், தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அவசியம் ஏற்படவில்லை.” – என்றனர்.

# ஹவுதி படையின் தளபதி மீது அமெரிக்கா பொருளாதார தடை



செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வரும் யேமனின் ஹவுதி கிளர்ச்சிப் படையின் முக்கிய தளபதி மீது அமெரிக்காவும், பிரிட்டனும் நேற்று பொருளாதாரத் தடை அறிவித்தன.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுச் செயலக செய்தித் தொடர்பாளர் மத்யூ மில்லர் கருத்து தெரிவிக்கையில்,

"செங்கடல் பகுதியில் தாக்குதல் நடத்தி வரும் ஹவுதி படையின் முக்கிய தளபதி இப்ராஹிம் அல்-நஷீரி மீது அமெரிக்காவும், பிரிட்டனும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இது மட்டுமன்றி, இந்த விவகாரத்தில் ஈரானின் துணை இராணுவப் படையான இஸ்லாமிய புரட்சிப் படையின் துணை தளபதி முகமது ரெஸா ஃபலாஸ்தே மீதும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ஈரான் மற்றும் ஹத்தி அதிகாரிகளுக்கு வர்த்தகப் பொருள்களைக் கொண்டு சென்ற ஹொங் கொங்கைச் சேர்ந்த கேப் டீஸ், கொஹனா ஆகிய நிறுவனங்களும் தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

சர்வதேச வர்த்தக வழித்தடத்தில் பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் அமெரிக்காவும், கூட்டணி நாடுகளும் உறுதியாக உள்ளதை இந்தப் பொருளாதாரத் தடைகள் உணர்த்துகின்றன."– என்றார்.

இஸ்ரேல் தொடர்பான சரக்குக் கப்பல்கள் மீது மட்டுமே தாக்குதல் நடத்துவதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கூறினாலும், பிற கப்பல்களும் குறிவைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

# ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேல் வீரர்கள் இருவர் பலி



காசா பகுதியில் ஹமாஸுக்கு எதிரான போரில் இரண்டு வீரர்கள் கொல்லப்பட்டனர் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை நேற்று அறிவித்தது.

வடக்கு காசாவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த சண்டையில் இரண்டு அதிகாரிகள் கொல்லப்பட்டனர் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை அறிவித்தது.

இதே சம்பவத்தில் ஜாபர் பட்டாலியனின் மேலும் ஏழு வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாயன்று காசா நகரின் ஜெய்டவுன் சுற்றுப்புறத்தில் கண்ணிவெடி வெடித்ததில் ஷஹர் மற்றும் சீஃப் ஆகிய இரண்டு வீரர்கள் கொல்லப்பட்டனர். ஏழு வீரர்கள் காயமடைந்தனர்.

இதன்படி ஹமாஸுக்கு எதிரான தாக்குதலில் உயிரிழந்த இஸ்ரேல் படையினரின் எண்ணிக்கை 242 ஆக உயர்ந்துள்ளது.




# ரஷ்யாவுக்கு ஆயுத ஏற்றுமதி செய்யப்படுகிறது; வடகொரியா மீது தென்கொரியா குற்றச்சாட்டு

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவிற்கு பாரியளவான ஆயுதங்களை வட கொரியா ஏற்றுமதி செய்துள்ளதாக தென்கொரியா குற்றம் சுமத்தியுள்ளது.

அதன்படி கடந்த ஜீலை மாதத்திலிருந்து இதுவரை சுமார் 6,700 கொள்கலங்களில் மில்லியன் கணக்கான துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட ஆயுதங்களை வடகொரியா அனுப்பி வைத்துள்ளதாக தென் கொரிய பாதுகாப்பு அமைச்சர் சின் வென் சிக் தெரிவித்துள்ளார்.

ஆயுத வழங்கலுக்கு பதிலீடாக உணவுப் பொருள்களை ரஷ்யா, வட கொரியாவிற்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வட கொரிய ஆயுத தொழிற்சாலைகள் குறைந்த மூலப்பொருள் மற்றும் மின்சார குறைவு காரணமாக தமது வினைதிறனை இழந்துள்ளதாகவும் தென்கொரியா சுட்டிக்காட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# அலக்ஸி நவல்னியின் உடல் வெள்ளிக்கிழமை நல்லடக்கம்!

சிறைச்சாலையில் மர்மமான முறையில் உயிரிழந்த, ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலக்ஸி நவல்னியின் உடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மெஸ்கோவில் அடக்கம் செய்யப்படும் என அவரது மனைவி யுலியா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இறுதி ஊர்வலம் அமைதியாக நடக்குமா? அல்லது ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள் கைது செய்யப்படுவார்களா? என்பது குறித்து தமக்கு உறுதியாக கூறமுடியாது எனவும் யுலியா தெரிவித்துள்ளார்.

இதேவேளை “மெஸ்கோ மாவட்டம், மரிய்னோவில் உள்ள மரியாள் தேவாலயத்தில் இறுதி ஆராதனை வழிபாடுகள் நடைபெற்று நல்லடக்கம் இடம்பெறுமென அலக்ஸியின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் அலக்ஸியின் இறுதி ஊர்வலத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு பலப்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

பக்கங்கள் - 5

வியாழக்கிழமை 29/02/2024

### உலகத் தர வரிசையில் மூன்றாவது இடம் டொரன்டோ பொது மருத்துவமனைக்கு!

ஒன்ராரியோ, பெப். 29

உலகப் பொது மருத்துவமனைகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை பல்கலைக்கழகத்தின் சுகாதார வலையமைப்பின் டொரன்டோ பொது மருத்துவமனை C2



# வீடமைப்புத் திட்ட அறிவிப்பை இன்று வெளியிடுகின்றார் பிரதமர் ட்ரூடோ!

**ஒன்ராரியோ,பெப்.29**

**இன்று வியாழக்கிழமை, கனேடிய வீடமைப்புத் திட்ட அறிவிப்புக்காக தன்டர் பேக்கு விஜயம் செய்கின்றார்.**

**நாடாளுமன்ற உறுப்பினர் பெட்டி ஹட்ஜ்வும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார் எனப் பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தன்டர் பேயின் மேயர் கென் பொஸ்கொப் அடுத்த மூன்று வருடங்களில் 2,113 வீடுகளை அமைப்பதற்கும், 2030 அளவில் 2,200 வீடுகளை அமைப்பதற்கும் உறுதிமொழி அளித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாகவே பிரதமரின் அறிவிப்பு அமையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# டொரன்டோவில் தனிநபர் ஒருவருக்கு வருடாந்தம் 61ஆயிரம் டொலர் தேவை

## வாழ்க்கைச் செலவு தொடர்பான ஆய்வில் முடிவு

**ஒன்ராரியோ, பெப்.29**

டொரன்டோவில் தனிநபர் ஒருவர் உடல்ரீதியாக, சமூகரீதியாக மற்றும் உளவியல் ரீதியாக ஆரோக்கியமாக வாழ்வதற்கு வருடம் ஒன்றுக்கு 61 ஆயிரம் 654 டொலர்கள் தேவை என வெல்லஸ்லி நிறுவனம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

25 மற்றும் 40 வயதுக்கு இடைப்பட்ட திருமணமாகாத ஒருவருக்கு வரிக்குப் பின்னர் வருடத்திற்கான தொகையாக இந்தத் தொகை கண்டறியப்பட்டுள்ளது.

இதே தொகை மிசிசாகாவில் 83,680 டொலர்கள் என அந்த கற்கை தெரிவிக்கின்றது.

டொரன்டோவில் தற்போது அமுலில் இருக்கின்ற மணித்தியாலத்திற்கு ஆகக் குறைந்தது 16.55 டொலர்கள் மற்றும் வாரத்திற்கு 35 மணித்தியாலங்கள் என்ற கணக்கில் பார்க்கும் போது, 25,994 டொலர்களே வருடாந்த வருமானமாக இருக்கும்.



இந்த ஆய்வில் தங்குமிடம், போக்குவரத்து மற்றும் சேமிப்பு என்பன சார்ந்த செலவுகள் அதிக செலவுகளாக கணிக்கப்பட்டுள்ளன.

பணிபுரியும் தனிநபர் ஒருவருக்கு ஆகக் குறைந்த வாழ்க்கைச் செலவுகளை தீர்ப்பதற்கு மணித்தியாலம் ஒன்றிற்கு 25.05 டொலர்கள் அல்லது வருடம் ஒன்றிற்கு 45,591 டொலர்கள் தேவை என இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

அதாவது டொரன்டோவில் வாழ்வதற்கு தேவையென கண்டறியப்பட்டுள்ள 61,554 டொலர்களில் 74 சதவீதமானது வாழ்க்கைச் செலவுக்கே செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

2017ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் முன்னெடுத்த ஆய்வுடன் ஒப்பிடும் போது, தற்போதைய வாழ்க்கைச் செலவு 33 சதவீத அதிகரிப்பைக் கண்டுள்ளது.

இந்த செலவிற்கு ஈடுகொடுக்கும் வகையில் மணித்தியாலத்திற்கான ஆகக்குறைந்த சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும் என அந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.



# நீதிபதிகள் தேர்வுக்கான நியமனக் குழுவை மாற்றியமைக்கும்படி தொடர்ந்தும் வற்புறுத்து

ஒன்ராரியோ, பெப். 29

ஒன்ராரியோ மாநிலத்தின் நீதி பதிகளைத் தெரிவு செய்யும் குழுவை மறுபரிசீலனை செய்யுமாறு புதிய ஜனநாயக கட்சி மாநில முதல்வர் டக் போர்ட்டிடம் கோரியுள்ளது.

நீதிபதிகளின் நியமனக் குழு தொடர்பான விவாதம் நேற்று பெப்ர வரி 28ஆம் திகதியும் மாநிலங்கள வையில் தீவிரமாக இடம்பெற்றது.

தன்னால் இந்தக் குழு நியமனத்தை மாற்ற முடியாது என டக் போர்ட் உறுதி யாக புதிய ஜனநாயகக் கட்சியிடம் தெரிவித்தார்.

தமக்கு நெருக்கமானவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் கன்சர்வேட்டிவ் கட்சியின் கொள்கையையே டக் போர்ட்டும் பின்பற்றுகின்றார் என புதிய ஜனநாயகக் கட்சி விமர்சித்துள் ளது.

அமெரிக்காவைப் போன்ற ஒரு நடைமுறை கனடாவுக்குத் தேவை யில்லை எனவும் புதிய ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.




**உலகத் தரவரிசையில்...**

**(C1 ஆம் பகக்த் தொடர்ச்சி)**


பெற்றுள்ளது.

30 நாடுகளில் சுமார் 2,400 பொது மருத்துவமனைகளில் பெறப்படும் தரவுகளைப் பயன்படுத்தி இந்த தரப் படுத்தல் முன்னெடுக்கப்பட்டுள் ளது.

வைத்தியர் ஒருவருக்கான நோயா ளிகளின் எண்ணிக்கை, நோயாளி ஒருவருக்கான வைத்தியர்களின் அளவு என்பன உள்ளடங்கலாக நோயாளி களின் திருப்தி அளவுகள் மற்றும் மருத்துவமனையின் தரம் என்பவற் றின் அடிப்படையில் இந்த தரப்படுத் தல் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த இணைய ஆய்வியில் சுமார் 80,000 மருத்துவர்கள் நேர்காணப் பட்டுள்ளனர்.

கடந்த ஆறு வருடங்களாக நடத் தப்படும் இந்த ஆய்வில் உள்ளடக்கப் பட்ட ஒரேயொரு கனேடிய மருத்துவ மனையாக டொரன்டோ பொது மருத்துவமனை உள்ளது.



# மெக்சிக்கோ நாட்டவர்கள் இனி கனடா வருவதற்கு விசா அவசியம்

## இன்று முதல் புதிய விதிமுறைகள் அமுலுக்கு

ஒன்ராரியோ,பெப்.29

கனடாவிற்கு வருகை தரும் மெக்சிக்கோ நாட்டவர்களுக்கு விசாத் தேவைகளை மீள நடைமுறைப்படுத்த கனேடிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆங்கில இணையச் செய்தி சேவைக்கு சிரேஷ்ட அரசாங்க அதிகாரி இதனை தெரிவித்துள்ளார்.

இன்று பெப்ரவரி 29ஆம் திகதி, வியாழக்கிழமை இரவு 11:30 முதல் இந்தப் புதிய விதிகள் நடைமுறைக்கு வரவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மெக்சிக்கோவில் இருந்து வருகை தந்து புகலிடம் கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், அதனால் அதிகரித்து வரும் பிரச்சினைகளாலும் மெக்சிக்கோவில் இருந்து வருகை தருபவர்களுக்கு மீண்டும் விசா விதிமுறைகளை அறிமுகப்படுத்துமாறு எதிர்க்கட்சி அண்மையில் வலியுறுத்தியிருந்தது.

2016ஆம் ஆண்டில் மெக்சிக்கோவில் இருந்து வருபவர்களுக்கான விசாவில் கனேடிய அரசாங்கம் தளர்வினை ஏற்படுத்தியிருந்தது.

# ஒஸாவா நகரக் கத்திக் குத்துத் தொடர்பில் 12,13 வயதுடைய 2 சந்தேகநபர்கள் கைது




ஒன்ராரியோ,பெப்.29

பெப்ரவரி 28ஆம் திகதி ஒஸாவா நகரில் இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவம் தொடர்பில் 12 மற்றும் 13 வயதான இரு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெப்ரவரி 28ஆம் திகதி (நேற்று) மதியம் ஒரு மணியளவில் வீதியில் நடந்து சென்ற ஆண் ஒருவரை எதிர்கொண்ட இரு இளைஞர்கள் அந்த நபரின் கைபேசியை பறித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபர் கைபேசியை மீள எடுக்க முற்பட்ட போது, அந்த இளைஞர்கள் அவரைக் கத்தியால் குத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும், சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு அருகிலேயே சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளைஞர் குற்ற நீதிச் சட்டத்தின் கீழ் இந்தச் சந்தேக நபர்கள் மீது 15 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள போதிலும், பொது மக்களுக்கு அவர்கள் குறித்த விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை.



# சூரிய கிரகணத்தின் போது வீட்டில் இருந்து பணியாற்ற அனுமதி கோரும் ஆசிரியர்கள்!




ஒன்ராரியோ,பெப்.29

டொரன்டோ நகரைச் சேர்ந்த கத்தோலிக்க ஆசிரியர்கள் சூரிய கிரகணத்தின் போது வீட்டில் இருந்து பணியாற்றுவதற்கு அனுமதிக்குமாறு பாடசாலைகள் சபையிடம் கோரியுள்ளனர்.

சூரியக் கிரகணத்தின் போது மாணவர்களின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு, ஏப்ரல் 19ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 8ஆம் திகதிக்கு தொழில் சார் செயற்பாட்டு நடவடிக்கையை மாற்றியமைக்கு பாடசாலைகள் சபைக்கு டொரன்டோ முன்பள்ளி கத்தோலிக்க ஆசிரியர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

ஆனாலும், அந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆசிரியர்கள் சார்ந்தும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் என அந்த கடிதத்தில் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஆசிரியர்களின் நலன் தொடர்பிலும் பாடசாலைகள் சபை கவனத்தில் கொள்ள வேண்டும் எனச் சங்கம் கோரியுள்ளது.

கடைசியாக கனடாவில் சூரிய கிரகணத்தை காணக் கூடியதாக இருந்த வருடம் 1979ஆம் எனவும், அடுத்ததாக 2079இலேயே இந்த அரிய நிகழ்வு இடம்பெறும் எனவும் வானியலாளர்கள் கணித்துள்ளனர்.

இந்தச் சூரிய கிரகணத்தின் காரணமாக பெரும் டொரன்டோ நகரைச் சேர்ந்த பல பாடசாலை சபைகள், மாணவர்களின் தொழில்சார் நடவடிக்கைக்கான தினத்தை மாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், பாடசாலை சபைகளின் இந்த நடவடிக்கைகள் தொடர்பில் மாநில அரசு அதிருப்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





# உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு உதவ புதிய தொலைபேசிச்சேவை அறிமுகம்

## கியூபெக் அரசாங்கம் நடவடிக்கை

கியூபெக்,பெப்.29

உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உளவியல் உதவியை வழங்குவதற்கு 2 மில்லியன் டொலர்களை கியூபெக் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

நேற்று பெப்ரவரி 28ஆம் திகதி முதல் உதவி தேவையாகவுள்ள அரசியல்வாதிகளுக்கு அணுகக் கூடியதாக புதிய தொலைபேசி சேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்னர் சுமார் 10 வீதமான உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூர் பிரதிநிதிகளின் பணியாற்றும் சூழல்களை மேம்படுத்துவதற்கான கியூபெக் அரசாங்கத்தின் பல்லாண்டு திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த தொலைபேசி உதவி சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.





# ஸ்கார்பரோ பாடசாலைக்கு அருகில் பெண் காயமுற்றமை பற்றி விசாரணை

ஒன்ராரியோ,பெப்.29

ஸ்கார்பரோ மேரி ஸ்ட் அரச பாடசாலைக்கு அருகில் பெண்மணி ஒருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று பெப்ரவரி 28 காலை 11 மணியளவில் பாடசாலைக்கு அருகில் இந்த விபத்து ஏற்பட்டமை தொடர்பில் தமக்குத் தகவல் கிடைத்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்த போது உயிருக்கு அச்சுறுத்தலற்ற காயங்களுடன் காணப்பட்ட அந்தப் பெண்மணியை பின்னர் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்திற்கான காரணம் என்னவென்பது தொடர்பில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.